இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ ஊழியத்தின்

# வளரும் செடி

ஆண்டு சந்தா ரூ.25 தனிப்பிரதி ரூ.3

மலர் 17 மே–2026 மணம் 14



# இதயந்திறந்து

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

இஸ்ரவேலே நீ உனக்குக் கேடு உண்டாக்கிக் கொண்டாய், ஆனாலும் என்னிடத்தில் உனக்கு சகாயம் உண்டு என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒவ்வொரு மாதமும் கர்த்தரே நம்மை சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்துவதை நினைத்து அவரைத் துதிப்போம். அனுதினமும் அவருக்குள் நாம் வளர்ந்து பெருக வேண்டும் என்பதே அவருடைய விருப்பம்.

இந்த மாதத்தில் நம்மைக் கொண்டு செய்யும்படி தேவன் திட்டமிட்டதை, நிறைவேற்றுவதில் கவனமாக இருப்போம். பிள்ளைகளின் விடுமுறை நாட்களை பிரயோஜனமான முறையில் பயன்படுத்த கர்த்தரே உதவி செய்வாராக! புதிய கல்வி ஆண்டுக்குள் பிரவேசிக்கிற பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் கர்த்தர் கிருபை, பெலன், ஞானம் தந்து நடத்துவாராக!

நமது மிஷனரி பணித்தளங்களுக்காகவும், விசுவாசப் பிள்ளைகளுக்காகவும் ஜெபிப்போம். மலையடிப்புதூரிலும், பெதஸ்தா நகரிலும் இருக்கின்ற தடைகளை நீக்கி, நல்ல முடிவுகள் உண்டாகவும் ஜெபிப்போம். அந்தந்தப் பணித்தளங்களில் நாம் விடுதலையாய்க் கர்த்தரை மகிமைப்படுத்தும்படி ஊக்கமாக ஜெபிப்போம். கர்த்தர் உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்யும் பெரிய காரியத்தை நின்று பாருங்கள். ஜெபித்து ஜெயம் பெறுவோம்.

தேவ கிருபை நம்மில் பெருகுவதாக!

ஜெபத்துடனும் அன்புடனும்

**சகோ. ஜான் *M.* ஜெயராஜ்**

---

ஜெபியுங்கள்! **வாலிபர் முகாம் - 2026** பங்கு பெறுங்கள்.!!

இடம்: **இயேசு ஜீவிக்கிறார் வளாகம்,** மாவடி.

நாள்: **2026 மே 28** (வியாழன் — அரசுவிடுமுறை)

கருத்துப்பொருள்: **கர்த்தரின் தீபம்** (யோபு 29:3)

நடத்துபவர்கள்: **கிருபையின் ஊழியங்கள்,** தூத்துக்குடி.

ஆறாம் வகுப்பு முதல் கல்லூரி மாணவர்கள் வரை

*பெற்றோரே பிள்ளைகளை அழைத்து வாருங்கள்! அனுப்பித்தாருங்கள்.!*
*இயேசு பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்.*

தொடர்புக்கு : சகோ. **ஜான் M. ஜெயராஜ்** செல்: **94431 13292**

**மன்னா:**

# உனக்கு நீயே கேடு உண்டாக்காதே...

**சமாதான வழியை அறியார்கள்; அவர்கள் நடைகளில் நியாயமில்லை; தங்கள் பாதைகளைத் தாங்களே கோணலாக்கிக் கொண்டார்கள்; அவைகளில் நடக்கிற ஒருவனும் சமாதானத்தை அறியான்... (ஏசா. 59:8)**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடு உண்டாக்கிக் கொண்டாய், ஆனாலும் என்னிடத்தில் உனக்கு சகாயம் உண்டு என்ற இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒவ்வொரு மாதமும் கர்த்தர் நமக்குத் தருகின்ற பரலோக மன்னாவுக்காகத் தேவனைத் துதிப்போம். கர்த்தருடைய ஆவியானவர் உங்களுடன் பேசுகிறார் என்பதை உணர்ந்து, தேவனுக்கு நன்றி சொல்லுகிறேன்.

கர்த்தர் தமது வசனத்தை அனுப்பி, அவர்களை குணமாக்கி அழிவுக்குத் தப்புவிக்கிறார் (சங். 107:20) வார்த்தையினால் உண்டாகிய விடுதலையே நிலையானதும் நிரந்தரமானதுமாகும். வார்த்தையில் ஜீவன் இருப்பதினால் அந்த ஜீவன் மனுஷனுக்கு ஒளியாகவும், வெளிச்சமாகவும் இருக்கும். அதினால் இருள் நீங்கி வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாறுவார்கள்.

கடந்த மாதத்தில், **“தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்”** எனும் தலைப்பின் கீழாகக் கர்த்தர் பேசினார். உங்கள் கிரியைகளுக்கும் பலனுண்டு. உங்கள் அன்புள்ள பிரயாசங்களை மறந்துவிடுவதற்கு, தேவன் அநீதியுள்ளவரல்லவே. இனம், ஜனம், சொந்தம், பந்தம் மறந்தாலும், கர்த்தர் ஒருபோதும் மறப்பதில்லை. உங்கள் நம்பிக்கை வீண்போகாது. நிச்சயமாகவே உங்களுக்கு ஒரு நல்ல முடிவு உண்டாகும். கர்த்தரே அதைச் செய்கிறவர். உள்ளங்கை மேகம் எழும்பியிருப்பதினால், ஒரு ஆசீர்வாதமான மழை பெய்யும். விசுவாசத்துடன் எதிர்பார்த்து பெற்றுக்கொள்ளுங்கள்.

தனக்குத்தானே கேடுண்டாக்குகிற ஜனங்கள் பெருகியிருக்கிற காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வேதாகமத்திலும் சிலரைக் கவனியுங்கள்.

**1. ஏசா. 58:9 – தங்கள் பாதைகளைத் தாங்களே கோணலாக்கிக் கொண்டார்கள்.**

**2. ஓசி. 13:9 – இஸ்ரவேலே! நீ உனக்குக் கேடுண்டாக்கிக் கொண்டாய்...**

**3. சங். 9:15 – தாங்கள் வெட்டின குழியில் தாங்களே விழுந்தார்கள்.**

**4. 2நாளா. 26:16 – தனக்கு கேடுண்டாகுமட்டும் அவன் இருதயம் மேட்டிமையாகி..**

அன்பு நேசப்பிள்ளைகளே! நாம் ஜாக்கிரதையாய் செயல்படும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். உள்ளத்தில் கோபம், பொறாமை, பெருமை, கசப்பு, பகையுணர்வு, பழிவாங்குதல்... (மற்றும்பல) உண்டாகும்போது, மிகமிக கவனமாய் நடந்து கொள்ள வேண்டும். அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு எடுக்கும் முடிவுகள் ஏமாற்றத்திற்கு நேராய்க் கொண்டுபோகிறது. ஆகையால் இப்படிப்பட்ட சமயங்களில் பொறுமை, நிதானம் வேண்டும்.

**மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும், என் கிருபை உன்னை விட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்...(ஏசா. 54:10)**

நன்மை செய்வதாக நினைத்து, தனக்குத்தானே கேடு உண்டாக்கினவர்களை வேதாகமத்திலும் வாசிக்கிறோம். ஆகையால்தான் கர்த்தர், “உனக்கு நீயே கேடுண்டாக்காதே” எனும் தலைப்பின் கீழாகப் பேசும்படி வந்திருக்கிறார். நாம் கர்த்தரில் அவரது வார்த்தையிலும் கவனமாக இருப்போமானால், இப்படிப்பட்ட தீமைக்கும், தீங்குக்கும் விலகியிருக்க முடியும். ஜெபத்துடன் தொடருங்கள் கர்த்தர் இயேசு நம்முடன் பேசுவாராக!

# 1. ஆமானும் தூக்குமரமும்

**ஆமானின் மனைவியாகிய சிரேஷும், அவனுடைய சிநேகிதர் எல்லாரும் அவனைப் பார்த்து: ஐம்பது முழ உயரமான ஒரு தூக்குமரம் செய்யப்பட வேண்டும்; அதிலே மொர்தெகாயைத் தூக்கிப்போடும்படி நாளையதினம் நீர் இராஜாவுக்குச் சொல்ல வேண்டும்; பின்பு சந்தோஷமாய் ராஜாவுடனே கூட விருந்துக்குப் போகலாம் என்றார்கள்; இந்தக் காரியம் ஆமானுக்கு நன்றாய்க் கண்டதினால் தூக்குமரத்தைச் செய்வித்தான்... (எஸ்தர் 5:14)**

அகஸ்வேரு ராஜாவின் அரமனை வாசலிருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் எல்லாரும் ஆமானை வணங்கி நமஸ்கரித்து வந்தார்கள். ஆனாலும் மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவுமில்லை. இதைக் கண்ட ஆமான் மொர்தெகாயின் மேல் மூர்க்கம் நிறைந்தவனானான். ஆகையால் மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க வகை தேடினான். அதின்படி, ராஜாவினிடத்திலிருந்து, முத்திரைப் போடப்பட்ட கடிதத்தையும் ஆமான் பெற்றுக்கொண்டான். அதை நிறைவேற்றுவதற்கான நாளையும் குறிப்பிட்டு, 127 நாட்டிலும் அந்த செய்தி பிரசித்தம் பண்ணப்பட்டது.

மொர்தெகாய் இந்தச் செய்தியை எஸ்தருக்குத் தெரியப்படுத்தி, நீ ராஜாவினிடத்திற்குப் போய், தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணச் சொன்னான். அதின்படி தங்களுக்குள் உபவாசத்தை ஏற்படுத்தி, எஸ்தர் ராஜாவினிடத்தில் பிரவேசித்தாள். எஸ்தருக்கு ராஜாவின் கண்களில் தயை கிடைத்தது. ராஜா அவளை நோக்கி: எஸ்தர் ராஜாத்தியே! உனக்கு என்ன வேண்டும்? நீ கேட்கிற மன்றாட்டு என்ன? என்றான்.

எஸ்தர் ராஜாத்தி, தான் செய்திருந்த விருந்துக்கு ராஜாவையும், ஆமானையும் அழைத்திருந்தாள். அது ஆமானுக்கு பெருமையாகவும் கனமாகவும் இருந்தது. தனது குடும்பத்தினரிடத்தில் சொல்லி, சந்தோஷப்பட்டான். ஆனால் அந்த மொர்தெகாயைக் காணு மட்டும் அவையெல்லாம் எனக்கு ஒன்றுமில்லை என்றான். இதனால் ஆமானின் மனைவியும், சிநேகிதரும் சொல்லிய ஆலோசனையின்படி, ஐம்பது முழ உயரமான தூக்குமரத்தைச் செய்வித்தான். ராஜாவின் உத்தரவுபடி, மொர்தெகாயைத் தூக்கிலிட திட்டமிட்டான்.

இரண்டாம் நாள் விருந்து பரிமாறப்படும்போது, ராஜா எஸ்தரிடத்தில், உன் வேண்டுதல் என்ன? உன் மன்றாட்டு என்ன என்று கேட்டான். அதற்கு எஸ்தர் சொன்னதாவது,

ராஜாவே உம்முடைய கண்களில் எனக்கு கிருபை கிடைத்து, ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால் என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என்

ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக! எங்களை அழித்துக் கொன்று நிர்மூலமாக்கும்படி நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம்; அடிமைகளாகவும் வெள்ளாட்டிகளாகவும் விற்கப்பட்டுப்போனாலும் நான் மவுனமாயிருப்பேன்; இப்பொழுதோ ராஜாவுக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு அந்த சத்துரு உத்தரவாதம் பண்ண முடியாது என்றாள். (எஸ். 7:3,4)

இந்த வார்த்தையைக் கேட்ட ராஜா, எஸ்தரை நோக்கி: இப்படிச் செய்ய துணிகரங்கொண்டவன் யார்? அவன் எங்கே? என்றான். அதற்கு எஸ்தர்: சத்துருவும் பகைஞனுமாகிய அந்த மனிதன் இந்த துஷ்ட ஆமான் தான் என்றாள். அப்பொழுது ராஜாவுக்கும், ராஜாதிக்கும் முன்பாக ஆமான் திகிலடைந்தான். ராஜா உக்கிரத்தோடே திராட்சரசப் பந்தியை விட்டெழுந்து, அரமனைத் தோட்டத்திற்குள் போனான். சற்று நேரத்திற்கு பின்பு, ராஜா தோட்டத்திலிருந்து திரும்பி வருகையில், எஸ்தர் உட்கார்ந்திருந்த மெத்தையின் மேல் ஆமான் விழுந்து கிடந்தான்.

இதைப் பார்த்த ராஜா அதிர்ச்சியடைந்து, “நான் அரன்மனையிலிருக்கும் போதே, என் கண்முன்னே இவன் ராஜாத்தியைப் பலவந்தம் செய்ய வேண்டுமென்றிருக்கிறானோ என்றான்.” இந்த வார்த்தை ராஜாவின் வாயிலிருந்து பிறந்தவுடனே ஆமானின் முகத்தை மூடிப்போட்டார்கள்.

ராஜ சமுகத்திலிருக்கிற ஒரு பிரதானி ராஜாவினிடத்தில், ராஜாவின் நன்மைக்காகப் பேசின மொர்தெகாய்க்கு ஆமான் செய்வித்த ஐம்பது முழ உயரமான தூக்குமரம் ஆமானின் வீட்டண்டை நாட்டப்பட்டிருக்கிறது என்றான். அப்பொழுது ராஜா: ஆமானை அதிலே தூக்கிப் போடுங்கள் என்றான். அந்தப்படியே மொர்தெகாய்க்கு ஆயத்தம் பண்ணின தூக்குமரத்தில் ஆமானையே தூக்கிப் போட்டார்கள்.

அன்பு நேசப்பிள்ளைகளே! காரியம் மாறுதலாய் முடிந்தது. (எஸ். 9:1) ஆமான் மொர்தெகாய்க்காக தூக்கு மரத்தை ஆயத்தம் பண்ணினான். ஆமானே, அதில் தூக்கிப் போடப்படுகிற நிலை ஏற்பட்டது. தான் வெட்டின குழியில் தானே விழுந்தான். (சங். 9:15)

## 2. பிரதானிகளும் சிங்கக் கெபியும்)

**பிரதானிகள்: நாம் இந்தத் தானியேலை அவனுடைய தேவனைப் பற்றிய வேத விஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்தரத்தை கண்டுபிடிக்கக் கூடாது... (தானி. 6:5) என்றார்கள்.**

தானியேல் பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனா யிருந்தான். அவனுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் அவனை இராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான். தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள். அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால், அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை.

பிரதானிகளும் தேசாதிபதிகளும் கூட்டங்கூடி, ராஜாவினிடத்தில் போய், ராஜாவே நீர் என்றும் வாழ்க, எவனாகிலும் முப்பது நாள்வரையில் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்தத் தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி, யாதொரு காரியத்தைக் குறித்தும் விண்ணப்பம் பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட, ராஜா கட்டளை பிறப்பித்து, உறுதியான தாக்கீது செய்ய வேண்டுமென்று

ராஜாங்கத்திலுள்ள எல்லாரும் ஆலோசனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ராஜாவாகிய நீர் அதைக் கட்டளையிட்டு, அதற்குக் கையெழுத்து வைக்க வேண்டும் என்றார்கள். அப்படியே ராஜாவும் அதற்கு கையெழுத்து வைத்தான்.

தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்கு ராஜா கையெழுத்து வைத்திருக்கிறாரென்று அறிந்த போதிலும், அவன் தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே, எருசலேமுக்கு நேராகப் பலகனிகள் திறந்திருக்க அவன் அங்கே தான் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு, ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான்.

தானியேல் தன் தேவனுக்கு முன்பாக ஜெபம் பண்ணி, விண்ணப்பம் பண்ணுகிறதை அந்த மனுஷர் கண்டார்கள். உடனே அவர்கள் ராஜாவினிடத்தில் வந்து, ராஜாவே தானியேல் என்பவன் உம்மையும் நீர் கையெழுத்து வைத்துக் கொடுத்த கட்டளையையும் மதியாமல், தினம் மூன்று வேளையும் தான் பண்ணும் விண்ணப்பத்தைப் பண்ணுகிறான் என்றார்கள். ராஜா தானியேலை தப்புவிக்கிறதற்காக பிரயாசப்பட்டான். ஆனாலும் முடியாததினால் தானியேலைச் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள்...

ராஜா தன் அரமனைக்குப் போய், இரா முழுவதும் சாப்பிடாமலும், கீதவாத்தியம் முதலானவைகளை வரவொட்டாமலும் இருந்தான். அவனுக்கு நித்திரை வராமற்போயிற்று. அதிகாலையில் எழுந்து சிங்கக் கெபிக்கு நேராகத் தீவிரமாய்ப் போனான். கெபியின் கிட்டவந்தபோது, துயர சத்தமாய், “தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா? என்று கேட்டான்.

அப்பொழுது தானியேல்: ராஜாவே, நீர் என்றும் வாழ்க. சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தமது தூதனை அனுப்பி, சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டார் என்றான். ராஜாவின் வார்த்தையால் அவனைச் சிங்கங்களின் கெபியிலிருந்து தூக்கிவிட்டார்கள். அவனில் ஒரு சேதமும் ஏற்படவில்லை.

தானியேலின் மேல் குற்றஞ்சாட்டின மனிதரை ராஜா கொண்டுவரச் சொன்னான். அவர்களையும் அவர்களது மனைவிகள், பிள்ளைகள் அனைவரையும் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். சிங்கங்கள் அவர்களை நொறுக்கிப்போட்டது.

அன்பு நேசப்பிள்ளைகளே! பிரதானிகள் தானியேலைக் குற்றப்படுத்தி, அழித்துவிட திட்டம் தீட்டினார்கள். ஆனால் அவர்கள் தீட்டிய திட்டமானது, அவர்களே அழிந்து போவதற்குக் காரணமாயிற்று. தங்கள் பாதைகளைத் தாங்களே கோணலாக்கிக் கொண்டார்கள். தான் வெட்டின குழியில் தானே விழுந்தார்கள். ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்புங்கள்.

**இஸ்ரவேலே! நீ உனக்குக் கேடுண்டாக்கிக் கொண்டாய். ஆனால் என்னிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு...(ஓசி. 13:9)**

## 3. சவுலும் கண்ணியும்

**சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதுக்குக் கண்ணியாயிருக்கவும் பெலிஸ்தரின் கை அவன்மேல் விழவும் அவளை அவனுக்குக் கொடுப்பேன் என்று சவுல் எண்ணி, தாவீதை நோக்கி: நீ என்னுடைய இரண்டாம் குமாரத்தியினால் இன்று எனக்கு மருமகனாவாய் என்றான். (1சாமு. 18:21)**

தாவீது பெலிஸ்தனைக் கொன்று திரும்பி வந்தபின்பு, ஜனங்கள் இஸ்ரவேலின் சகல பட்டணங்களிலிருமிருந்து புறப்பட்டு ஆடல் பாடலுடன் சவுலுக்கு எதிர்கொண்டு வந்தார்கள். அந்த ஸ்திரீகள் ஆடிப் பாடுகையில் சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று முறைமுறையாகப் பாடினார்கள். அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது. அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதுக்குப் பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள்; இன்னும் ராஜாங்கம் மாத்திரம் அவனுக்குக் குறைவாயிருக்கிறது என்று சொல்லி, அந்நாள் முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான்.

தாவீதை பெலிஸ்தரின் கையினால் விழப்பண்ணுவதே சவுலின் எண்ணமாயிருந்தது. அவன் தான் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்கு சத்துருவாயிருந்தான். இந்தச் சூழ்நிலையில் சவுலின் மகளாகிய மீகாள் தாவீதை நேசித்தாள். இந்த செய்தி சவுலுக்கு அறிவிக்கபட்டபோது, அது அவனுக்கு சந்தோஷமாயிருந்தது. மீகாள் தாவீதுக்குக் கண்ணியாயிருக்கவும், அவள் மூலமாகத் தாவீதை கொன்று போடவும் சவுல் திட்டமிட்டான்.

தாவீதைக் கொலை செய்ய சுமார் பன்னிரெண்டு முறை சவுல் பிரயாசப்பட்டான். கர்த்தர் தாவீதை சவுல் கையில் ஒப்புக்கொடுக்க வில்லை. இந்த சூழ்நிலையில் ஒருநாள் சவுல், தாவீதின் வீட்டிற்குத் தனது சேவகரை அனுப்பி, தாவீதைக் கொன்றுபோட ஆயத்தமானான். இந்தச் செய்தி மீகாளுக்குத் தெரிந்ததினால், அவள் தாவீதை நோக்கி: நீர் இன்று இராத்திரியில் உம்முடைய பிராணனைத் தப்புவித்துக் கொள்ளாவிட்டால், நாளைக்கு நீர் கொன்று போடப்படுவீர் என்று சொல்லி, மீகாள் தாவீதை ஜன்னல் வழியாய் இறக்கிவிட்டாள். அவன் தப்பி ஓடிப்போனான்.

சவுலின் குமாரத்தியாகிய மீகாள், தாவீதை தப்புவித்து அனுப்பிவிட்ட செய்தியைக் கேட்ட சவுலின் சேவகர்கள் வந்து சவுலுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது சவுல் மீகாளை நோக்கி: நீ இப்படி என்னை ஏய்த்து, என் பகைஞனை தப்பவிட்டு அனுப்பினது என்ன என்று கேட்டான். அதற்கு மீகாள்: என்னைப் போகவிடு, நான் உன்னை ஏன் கொல்ல வேண்டும் என்று என்னிடம் சொன்னார் என்றாள்.

அன்பு நேசப்பிள்ளைகளே! தன் குமாரத்தியாகிய மீகாள் தனக்கு அனுகூலமாகவும், தன் சத்துருவாகிய தாவீதுக்குக் கண்ணியாகவும் இருப்பாள் என்று நினைத்து அவளை தாவீதுக்கு மனைவியாகக் கொடுத்தான். ஆனால் மீகாளோ, சவுலின் சத்துருவுக்குத் துணையாக நின்று, சவுலின் கையினால் மடிந்து போகாதபடிக்குத் தாவீதைத் தப்புவித்தாள். காரியம் மாறுதலாய் முடிந்தது.

சவுல் அனுதினமும் தாவீதைத் தேடியும், கர்த்தர் தாவீதைச் சவுலின் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. தாவீது போன இடமெல்லாம் கர்த்தர் அவனை காப்பாற்றினார். அதே கர்த்தர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும், உங்கள் தொழிலையும், உங்கள் கைகளின் பிரயாசத்தையும் காப்பார். இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை.

## 4. லோத்தும் சோவாரும்

**ஆண்டவரே, மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது. தீங்கு என்னைத் தொடரும், நான் மரித்துப்போவேன். அதோ, அந்த ஊர் இருக்கிறதே, நான்**

**அதற்கு ஓடிப்போகத்தக்கதாய் அது கிட்ட இருக்கிறது, சின்னதுமாய் இருக்கிறது; என் பிராணன் பிழைக்க நான் அங்கே ஓடிப் போகட்டும். அது சின்ன ஊர்தானே என்றான்...(ஆதி. 19:19,20)**

லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். இரண்டு தூதர்கள் சாயங்காலத்தில் சோதோமுக்கு வந்தார்கள். லோத்து அவர்களை அழைத்து, விசாரித்து அவர்களுக்கு விருந்து பண்ணினான். அவர்கள் அவனை நோக்கி: நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப் போகிறோம், இவர்கள் கூக்குரல் கர்த்தருடைய சமூகத்தில் பெரியதாயிருக்கிறது. இதை அழிக்க கர்த்தர் எங்களை அனுப்பினார். ஆகையால் இந்த பட்டணத்தில் உனக்குரியவர்கள் யாராவது இருந்தால், அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே கொண்டு வா என்றார்கள்.

லோத்து தாமதித்தபோது, அவர்கள் அவனையும் அவனது மனைவி, பிள்ளைகளையும் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டனர். உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே, இந்த சமபூமியில் எங்கும் நில்லாதே, நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்.

அதற்கு லோத்து, அப்படியல்ல ஆண்டவரே, மலைக்கு ஓடிப்போக என்னால் முடியாது, தீங்கு என்னைத் தொடரும், நான் மரித்துப்போவேன். அதோ அந்த ஊர் இருக்கிறதே, நான் அங்கே ஓடிப்போகட்டும் என்றார். அதற்கு அவர்: நீ கேட்டுக்கொண்டபடியே உனக்கு அனுக்கிரகம் பண்ணினேன் என்றார். அப்பொழுது கர்த்தர் வானத்திலிருந்து கந்தகத்தையும், அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, பட்டணத்தை அழித்துப்போட்டார். லோத்தின் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள்.

லோத்து கோவாரிலே குடியிருக்கப் பயந்து, அவனும் அவன் இரண்டு குமாரத்திகளும் மலைக்குப் போய் வாசம்பண்ணினார்கள். இப்போது மலைக்குப்போன லோத்து, கர்த்தர் சொன்ன உடனே மலைக்குப் போயிருந்தாள் மனைவி உப்புத் தூண் ஆகியிருக்கமாட்டாள்.

லோத்தின் மனைவி மரித்தபின்பு, அவனும் அவனது இரண்டு குமாரத்திகளும் மலையிலுள்ள கெபியிலே வாழ்ந்துகொண்டிருந்தார்கள். குமாரத்திகள் இருவரும் தங்கள் தகப்பனோடே சேர்ந்து கர்ப்பவதியானார்கள் (ஆதி. 19:36) மோவாபியர், அம்மோனியர் என்கிறதான இரண்டு அருவருப்பான சந்ததிகள் உண்டாயிற்று. காரணம் லோத்து நீதிமானாக இருந்தும் தனக்குத் தானே கேடு உண்டாகும்படியான தெரிந்து கொள்ளுதல். லோத்தின் மனைவி இருந்திருந்தால் இப்படிப்பட்ட அருவருப்பான வழிக்குப் பிள்ளைகளை விட்டிருக்கவே மாட்டாள்.

அன்பு நேசப்பிள்ளைகளே, "உனக்கு நீயே கேடுண்டாக்காதே" என்கிற விஷயத்தில் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளும்படி அழைக்கப்படுகிறோம். நம்மைக்குறித்து தேவனுடைய சித்தம் இன்னதென்பதை உணர்ந்து, அதின்படி செயல்பட்டு, தேவன் நமக்கு ஆயத்தம் பண்ணின நன்மையை சுதந்தரித்துக் கொள்வோமாக! மகிமை இயேசுவுக்கே! ஆமென்!! அல்லேலூயா!!!

---

## காணத்தவறாதீர்கள்!

## TCCL - TV சேனலில் நமது நிகழ்ச்சிகள்

| | TCCL NO: | தொலைக்காட்சி | கிழமைகள் | நேரம் |
|---|---|---|---|---|
| 1 | 170 | ஜீவன் காஸ்பல் TV | சனி | இரவு 9:30 – 9:45 |
| | | | ஞாயிறு | மதியம் 2:02 – 2:20 |
| 2 | 177 | மகிமை TV | செவ்வாய் | இரவு 8:30 – 8:45 |
| | | | சனி | இரவு 8:30 – 8:45 |
| 3 | 600 | நம்பிக்கை TV | சனி | காலை 6:45 – 7:00 |
| 4 | 730 | ஜெயம் TV | ஞாயிறு | இரவு 8:30 – 8:45 |
| 5 | 737 | அதிசயம் TV (Adhisayam TV) | வியாழன் | இரவு 9:30 – 9:45 |
| | | | சனி | காலை 8:30 – 8:45 |
| 6 | | JTK TV- யில் | திங்கள் | இரவு 8:30 – 8:45 |
| 7. | கன்னியாகுமாரி மாவட்டத்தில் **வசனம்** TV- யில் தினமும் இரவு 7:30 | | | |

## ஜெப சேனை ஜெபக் குறிப்புகள் [மே 2026]



1. மத்திய, மாநில அரசுகளின் ஒன்றிணைந்த செயல்களுக்காக...
2. ஜனாதிபதி, பிரதமர், மத்திய மாநில அமைச்சர்களுக்காக...
3. முப்படைத் தளபதிகள், சேனைகள், வீரர்களுக்காக...
4. பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக...
5. அமெரிக்க, இஸ்ரேல், ஈரான் யுத்த அமைதிக்காக...
6. யுத்தத்தினால் ஏற்படும் விலைவாசி உயர்வுக்காக...
7. கொலை, கொள்ளை, தீவிரவாதத்தில் அமைதல் உண்டாக...
8. ஜாதி வெறி, மொழி வெறியினால் உண்டாகும் அழிவுகள் நீங்கிட...
9. நமது இயேசு ஜீவிக்கிறார் ஊழியம், ஊழியர்கள், விசுவாசிகளுக்காக...
10. நமது ஜெப சேனை, TV நிகழ்ச்சிகள், பத்திரிக்கை, புத்தக ஊழியங்களுக்காக...



## நடப்புச் செய்திகள்



1. உலக அமைதிக்காக விசேஷித்த ஜெபம்.
2. ஐ.நா. சபையில் தமிழ்நாட்டின் சிறப்பு.
3. இந்திய மாநிலங்களின் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம்.
4. தேர்தலில் மக்கள் அதிகஅளவு ஓட்டளிப்பு.
5. மே மாதத்தில் வெயிலின் வெப்பம் அதிகமாகவே இருக்கும்.
6. பகல் வெயிலில் அலைவதை குறைப்பது நல்லது.

ஆவிக்குரிய நோயாளி. (ஏசா. 34:16)

# தேவன் இப்படியும் பேசுவாரா!

## 1. தவறை திருத்துபவன் வெற்றியை நாடுகிறான்

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! தவறுகளை தடுக்கமுடியவில்லையே என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! தவறுகள் வராமற்போவது கூடாத காரியம். ஆனாலும் தொடர்ந்து தவறுக்கு இடங்கொடாமல், அதைத் திருத்துவதற்கு பிரயாசப்படு. நீ திருத்தும்போது, திருந்தும் போது, அது உன் வெற்றிக்கு வழி காட்டும்" என்றார்.

**நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு...(வெளி. 3:19)**

## 2. அன்பை நீ தேடாதே, உன்னை தேடி வரும் அன்பே நிலையானது

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! உண்மையான அன்பை எங்கும் கண்டுபிடிக்க முடியவில்லையே என வருந்தி ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! இந்த உலகில் நீ தேடிச்செல்லும் அன்பு நிலையற்றது. அது நினையாத நேரத்தில் மறைந்து போகும். உன்னைத் தேடிவரும் அன்பே நிலையானது, அது இயேசுவின் அன்பே" என்றார்.

**தேவன் அன்பாகவே இருக்கிறார்... (1 யோ 5:20)**

## 3. முயற்சிக்கு முடிவு இல்லை:-

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! எதுவரைக்கும் முயற்சி செய்வது என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! முயற்சி என்பது ஒரு குறிப்பிட்ட எல்லையை உடையது அல்ல. உன் நோக்கம் நிறைவேறும் வரை, நீ விரும்புவதை அடையும்வரை செய்யும் தருமமே முயற்சியாகும். பெற்றுக்கொள்ளும்வரை நிற்காமல் செயல்படு" என்றார்.

**கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ்செய்யும் வரைக்கும் எங்கள் கண்கள் அவரையே நோக்கி இருந்தது. (சங். 123:2)**

உலக்கையில் பூண்: (சங். 57:1)

➠

# தூண்டில்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! விடைகளை வெள்ளைத் தாளில் எழுதி, வருகிற 20ஆம் தேதிக்குள் எனக்குக் கிடைக்கும்படியாக அனுப்புங்கள். கடைசி இரண்டு கேள்விகளும் நீதிமொழிகள் – உன்னதப்பாட்டு புஸ்தகங்களுக்கிடையே உள்ளது.

**மே 2026** **தூண்டில் போடுங்கள், வலை (Internet) விரிக்காதீர்கள்.**

1. உனக்கு இங்கே யார் இருக்கிறார்கள் – என்றது யார்?
2. நீங்கள் எங்கே போனீர்கள் – என்றது யார்?
3. இனி அவர்களை மன்னிக்க மாட்டேன் – என்றது யார்?
4. அங்கே எவைகளை இறக்க வேண்டியதாயிருந்தது?
5. எது இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை?
6. அவர்களை நாம் தொடக்கூடாது – என்றது யார்?
7. உங்களோடே கூட போவோம் – என்பது யார்?
8. யார் என்னை அழிக்கக் காத்திருக்கிறார்கள்?
9. நான் சொன்ன நாள் இதுவே – என்றது யார்?
10. நீ முற்றிலும் சங்கரிக்கப்பட்டுப் போவாய் – வாசிப்பதெங்கே?
11. எது பெரிய குற்றங்களையும் அமர்த்திப்போடும்?
12. யார் வர அவமானம் வரும்?

## 2026 ஏப்ரல் மாத மீன்கள்

1. ஏசா 65:5 – கர்த்தர்
2. ஆதி. 27:37 – ஈசாக்கு
3. 1இரா. 13:6 – தேவனுடைய மனுஷன்
4. யோபு 20:10 – பறித்ததை
5. எரே. 3:7 – கர்த்தர்
6. மீகா. 7:11 – என் மதில்களை
7. உபா. 2:3 – மலை நாட்டை
8. ஏசா 58:2 – என் ஜனங்கள்
9. அப். 20:24 – ஊழியத்தை
10. 2சாமு. 18:22 – யோவாப்
11. சங். 105:38 – இஸ்ரவேலர்
12. யோபு 6:15 – வெள்ளத்தை

## 2026 மார்ச் மாதம் மீன் பிடித்தவர்கள்

01. Mrs.D. ஜெபக்குட்டி மோசஸ் – மருதகுளம்.
02. Mrs. ஜான்சி சந்தியா – மருதகுளம்.
03. Mrs. ஹெலன் சுவிட் – டோனாவூர்.
04. Mrs. ஷெர்லி சாம் – அரக்கோணம்.
05. Mrs. சுசிலா ஜெயக்குமார் – அரக்கோணம்.
06. Mrs. J. ஜான்சி – ஆனைமலை.
07. Mrs. லாய்ஸ் ஜான் – பணகுடி.
08. Mrs. அன்னத்தாய் ஆல்பட் – மெஞ்ஞானபுரம்.
09. Mrs. அன்னபாக்கியம் தினகரன் – மதுரை.
10. Mrs. செல்வி ஜேக்கப் – தென்காசி.
11. Mrs. ஜெயந்தி விக்டர் – ஒசூர்
12. Mrs. ஜேன் தர்மராஜ் – பாக்கியநாதபுரம்
13. Mrs. ரோஸ்லின் கனகராஜ் – ஓடக்கரை
14. Sist. அலிஸ் குணசீலி – சாயர்புரம்.
15. Mrs. ரோஸ்லின் கனகராஜ் – ஓடக்கரை

Registered News Paper
R.n.i. No : Tntam / 2004 / 12805. Postal Regn. No : Tvl / 005 / 2021 - 2023
Date of Publication : 01.05.2026



# இயேசு ஜீவிக்கிறார் வெளியீடுகள்

தேவ கிருபையினால் பாடல் CD–க்களும், புத்தகமும் வெளியிடக் கர்த்தர் உதவி செய்தார். ஜீவ கீதங்கள் பாடல்களும் மற்றும் புதிய புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளது. ஜெபத்துடன் பெற்று பயனடையுங்கள்.

**பதிவுத் தபாலில் அனுப்பிட செலவு தனி**

1. ஜீவ கீதங்கள் (ACD) (Vol : 1 to 24)
2. ஜீவ கீதங்கள் (VCD), MP3
3. கேட்கும் கிருபை
4. ஜீவ கீதங்கள் (220 + 35 பாடல்கள்)
5. தேவன் இப்படியும் பேசுவாரா! (Part 1-8)
6. நோவாவின் பேழை
7. வளரும் செடி
8. மனிதன்
9. வெற்றியுள்ளவன்
10. முதலாம் அற்புதம்
11. வாலிபனே நீ யார்?
12. என் இருதயத்திற்கு ஏற்றவனான தாவீது
13. ஜலத்தினின்று எடுக்கப்பட்டவன்
14. தேவன் தெரிந்த நாகமான்
15. ஊழியரே இது உங்களுக்காக (50 செய்திகள்)
16. டோனாவூரம்மா
17. நான் கண்ட சகேயு
18. ஜீவ விதைகள் (150 பிரசங்க குறிப்புகள்)
19. நகோமி
20. அந்த ராத்திரியிலே...

**JOHN M. JEYARAJ,**
178, Dohnavur Road, Mavadi - 627 107
Tirunelveli Dist., S. India
Phone : (04635) 210 691, Cell : 94431 13292
E-mail : yesujeevikkirar@gmail.com, Website : www.jesuslivesministries.in

Book Post

To

Owned & Published by : John M. Jeyaraj From 123-A, Dohnavur Road, Mavadi - 627107 - Tirunelveli District. Printed by Mr. S. Jairus Ponniah at Swarnapriya Printers, 35/16-A, Tiruchendur Road, Palayamkottai. Tirunelveli Dt. - 627 002. Editor : John M. Jeyaraj